Australian Government
Department of Home Affairs

# என்னிடம் நிரந்தர விசா உள்ளது

நிரந்தர வதிவிட விசா வைத்திருப்பவர்கள் (PR) காலவரையறையேதுமின்றி ஆஸ்திரேலியாவில் தங்கியிருக்க முடியும். ஆனால் நீங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து சென்று அதன்பின்னர் மீண்டும் வர விரும்பினால், உங்களது நிரந்தர விசாவில் (பொதுவாக ஐந்து ஆண்டுகாலப்பகுதி) நிரந்தர பயண வசதிக் காலத்தை நீங்கள் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

பின்வருவனவற்றின் மூலம் சரிபார்க்கலாம்:

- VEVO சேவையைப்பயன்படுத்துதல், அல்லது
- விசா நிபந்தனைகளை ImmiAccount மூலம் அணுகுதல்.

உங்கள் நிரந்தர விசாவில் பயண வசதிக்காலம் காலாவதியாகும்போது நீங்கள் தற்காலிக விசா மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைவீர்களானால் எதிர்மறையான விளைவுகளுக்கு உள்ளாக நேரிடலாம். விபரங்களுக்கு 'வதிவிட மீள்வருகை விசா' ஐப் பார்க்கவும்.